**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 185/2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–5 மிதுன்குமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 28.07.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 2ம் பிரதிவாதி எங்கள் நிறுவனத்தில் எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் ரூ.15,40,000/– வாங்கினார். மேற்படி கடனை எதற்காக வாங்கினார் என்றால் வீடு கட்டுவதற்காக வாங்கினார். 2ம் பிரதிவாதி கடன் கேட்டு விண்ணப்பம் செய்த பின்னிட்டு நாங்கள் இடத்தை பார்வையிட்ட பிறகுதான் கடனை அனுமதித்தோம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் சார்பாக இடத்தை யார் பார்வையிட்டது என்றால், எங்கள் நிறுவனத்தின் பொறியாளர் இடத்தை பார்வையிட்டு, அது சம்பந்தமான அறிக்கை கொடுப்பார். பின்னிட்டு அதை நாங்கள் உறுதி செய்து கடனை அனுமதிப்போம். எங்கள் நிறுவனத்தின் பொறியாளர் கொடுத்த அறிக்கையை தாக்கல் செய்ய முடியுமா என்றால், 2ம் பிரதிவாதி வாங்கிய கடன் 2024ம் வருடமே முடிந்து விட்டதால் கடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி விட்டோம், வேண்டும் என்றால் வாங்கி தாக்கல் செய்கிறேன்.

2) பி.சா.ஆ.4 ஆவணத்தில் 2 சர்வே எண்கள் குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த சர்வே எண்ணில் 2ம் பிரதிவாதி வீடு கட்டினார் என்றால், ஆவணங்களை பார்த்துதான் சொல்ல முடியும். 2ம் பிரதிவாதி வீடு கட்ட ஆரம்பித்த பின்னிட்டு கடன் வாங்கினாரா அல்லது வீடு கட்ட ஆரம்பிப்பதற்கு முன்பே கடன் விண்ணப்பம் கொடுத்தாரா என்றால், வீடு கட்டுவதற்கு முன்பே கொடுத்து, வீடு கட்டும் ஒவ்வொறு நிலையிலும் பகுதி, பகுதியாக கடன்தொகை வழங்கப்பட்டது. பி.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சர்வே எண்ணில்தான் 2ம் பிரதிவாதி வீடு கட்டினாரா என்று நாங்கள் உறுதி செய்து கொண்டோமா என்றால் உறுதி செய்து கொண்டோம். 2ம் பிரதிவாதி சர்வே எண் 105/3 மற்றும் 105/2ற்கு

உள்ள நிலங்களில் வீடு கட்டுவதாகத்தான் கடன் வாங்கினார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சர்Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.வே எண் 105/3 மற்றும் 105/2ல் எந்த வீடும் கட்டவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சர்வே எண் 106/2ல்தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் எங்கள் நிறுவனத்தை ஏமாற்றி மோசடியாக வீட்டுகடன் பெற்றுள்ளனர் என்றும், அதற்கு நாங்கள் உடந்தையாக இருந்துள்ளோம் என்றால் சரியல்ல. கடன் பெற்ற இடத்தில்தான் வீடு கட்டுகிறார்களா என நாங்கள் முறையாக ஆய்வு செய்யாமல் கடன் தொகையை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**